சார்பு நீதிமன்றம். அருப்புக்கோட்டை.
முன்னிலை: திரு.R.சதீஷ், M.L.,
சார்பு நீதிபதி. அருப்புக்கோட்டை.
2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் நாள் திங்கட்கிழமை

**அ.வ.எண்.59/2026**

CNR.No.TNVR13-000127-2026

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தாலுகா, கல்லூரணி கிராமம், மேலத்தெரு, கதவு எண்.5/232 என்ற முகவரியில் வசிக்கும் பரமசிவன் மகன், சுமார் 67 வயதுள்ள முருகன்.

... வாதி

– எதிர் –

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தாலுகா, சிதம்பராபுரம் போஸ்ட், ராமநாயக்கன்பட்டி கிராமம், ஆசாரிமார் தெரு என்ற முகவரியில் வசிக்கும் ஜெயக்கண்ணன் மகன், சுமார் 45 வயதுள்ள பத்மநாபன்.

... பிரதிவாதி

வாதிக்கு பிரதிவாதி செலுத்த வேண்டிய தொகை ரூ.1,25,500/–மும் அதில் அசல் தொகை ரூ.1,00,000/–க்கு பிராது தேதியிலிருந்து தொகை வசூலாகும் தேதி வரை பின்வட்டி சேர்த்து செலுத்தக்கோரியும் மற்றும் வழக்கின் செலவுத்தொகை கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கல் நாள் | : | 11.02.2026, 11.03.2026 |
| நீதிமன்றக் கட்டணம் | : | தாவா வழக்கை ரூ.1,25,500/–ஆக மதித்து அதற்கு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டண சட்டம் பிரிவு 22–ன் படி ரூ.3,765/– நீதிமன்றக் கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது. |
| வழக்கு மூலம் | : | 25.12.2023, 10.01.2026 மற்றும் 12.01.2026 ஆகிய தேதிகளில் அருப்புக்கோட்டை தாலுகா, பொம்மகோட்டையில் வைத்து உற்பத்தி. |

இவ்வழக்கு 20.07.2026ம் தேதி அன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஏ.எம்.வடிவேல் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் அழைத்த போது ஆஜராகாத நிலையில், பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்ச

உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையிலும், மேலும், வாதி தரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

## தீ ர் ப் பா ணை

1. வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.
2. வாதிக்கு பிரதிவாதி செலுத்த வேண்டிய தொகை ரூ.1,25,500/—ம், அதில் அசல் தொகை ரூ.1,00,000/—க்கு பிராது தேதி முதல் தீர்ப்பாணை தேதி வரை ஆண்டுக்கு 9% வட்டியும், தீர்ப்பாணை தேதி முதல் தொகை முழுவதும் வசூலாகும் தேதி வரை ஆண்டுக்கு 6% வட்டியும் வழங்க வேண்டும்.

## செலவுத் தொகை விபரம்

(இருதரப்பிலும் செலவுத்தொகை விபரம் தாக்கல் இல்லை)

2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 20 ஆம் நாளன்று என்னுடைய கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

SATHISH Digitally signed by SATHISH

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

---

**தீ ர் ப் பா ணை**
OS.**No.59/2026**
நாள்: 20.07.2026
சார்பு நீதிமன்றம்,
அருப்புக்கோட்டை

---